# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண் 356/2016/பே.2

ஆணை எண்.295/2017/ நாள் – 22–12–2017

**திரு. S.P. செம்பன்,**
**வேங்கனூர், அய்யலூர்,**
**வேடசந்தூர் தாலூக்கா,**
**திண்டுக்கல் மாவட்டம்.** --- **முறையீட்டு மனுதாரர்.**

திருமதி ராஜலட்சுமி,
**பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,**
**மற்றும் பலர்,**
**அய்யலூர் பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம்.** --- **எதிர் மனுதாரர்கள்.**

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு எஸ்.பி. செம்பன், என்பவரின் 06.09.2013 ம் தேதியிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின கடித ந.க.எண்.12387/2013/இ.2/ நாள் 22.04.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண் 356/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு தொடர்பாக உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணை / வாக்குமூலங்களின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திருமதி ராஜலெட்சுமி அவர்கள் பேரூராட்சியின் நடவடிக்கைகளை கவனிப்பதில்லை எனவும் மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை எனவும் தெரிவித்து அவருக்கு பதில் அவரது மகன் திரு டி.சி. ராஜ்மோகன் என்பவர் பேரூராட்சியின் அதிகாரபூர்வமான தலைவரைபோல் மன்ற உறுப்பினர் கூட்டங்கள்

நடத்துவது முதல் அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார் எனத் தெரிவித்து கீழ்கண்டவாறான புகார்களை முன்னாள் பேரூராட்சி தலைவரின் மகன் குறித்து தெரிவித்துள்ளார்.

1. பேரூராட்சியின் அன்றாட நடவடிக்கைகளை கவனிப்பது.
2. தலைவர் இருக்கையில் அமர்ந்து தலைவருக்கு பதிலாக மன்ற கூட்டங்களை நடத்துவது எதிர்த்து பேசும் உறுப்பினர்களை மிரட்டுவது.
3. பேரூராட்சியின் செயல் அலுவலர், பணியாளர்களை தான் விரும்பும் காரியங்களை மட்டும் செய்ய வற்புறுத்துதல்
4. தன் நடவடிக்கைகளை எதிர்க்கும் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகளும் செய்து தர மறுப்பது.
5. பேரூராட்சியினை பயன்படுத்தி பாசனக்குளத்தை ஆக்கிரமித்து கடைகள் கட்டி பொது ஏலம் விடாமல் தனது சொந்தக் கட்டிடம் போல் தனக்கு வேண்டிய நபர்களுக்கு கொடுத்து பணம் வசூலித்து செயல் அலுவலரும் திரு டி.சி. ராஜ்மோகனும் பல லட்சங்கள் சுருட்டியுள்ளதாகவும்,
6. பேரூராட்சியின் சம்பளம் பெறும் பணியாளர்களை தனது சொந்த வேலைகளுக்கு பயன்படுத்துவது.
7. புதிய கட்டிடங்களுக்கு வரி விதிப்பது, குடிநீர் இணைப்பு செய்து கொடுத்தல் போன்றவைகளில் விதிகளுக்கு புறம்பாக செயல்படுதல்.
8. பேரூராட்சி திட்டப் பணிகளை பினாமி பெயரில் எடுத்து செய்தல்
9. பேரூராட்சியில் முறைகேடான செயல்கள் குறித்து மேலதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பும் செயல் அலுவலரும் திரு டி.சி. ராஜ்மோகன் என்பவருக்கு உடந்தையாக இருந்து வருகிறார்

மேற்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணைக் கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி 6ல் கண்டுள்ளவாறு நீதிமன்ற வில்லைக் கட்டணம் ரூ 10/ க்கு ஒட்டப்பட்டு படிவம் 1 பூர்த்தி செய்து சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை 03.05.2016 ன்படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் இதுநாள் வரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் இம்மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக்கோரி செயல் அலுவலர், அய்யலூர் பேரூராட்சிக்கு இம்முறைமன்ற 03.05.2016 மற்றும் 11.01.2017 ம் நாளிட்ட அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனு குறித்தான, மனுதாரர் தரப்பிலான விளக்கத்தினை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ 13.01.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அய்யலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 51/2017/நாள் 13.02.02017ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. அய்யலூர் பேரூராட்சியில் அன்றாட நடவடிக்கைகளான குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு போன்றவை பேரூராட்சி பணியாளர்களை வைத்து செயல் அலுவலரின் மேற்பார்வையில் நடைபெறுகிறது எனவும் இதில் திரு டி.சி.ராஜ்மோகன் என்பவர் கவனிக்கிறார் என மனுதாரரால் தெரிவித்திருப்பது தவறானது.
2. இப்பேரூராட்சியில் நடைபெறும் மன்றக் கூட்டத்தில் திருமதி டி.சி.ராஜலெட்சுமி அவர்களே தலைவர் இருக்கையில் அமர்ந்து துணைத் தலைவர், மன்ற உறுப்பினர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் முன்னிலையில் கூட்டத்தினை நடத்துவார் எனவும் தெரிவித்துள்ளார். இதுவரை சாதாரணக் கூட்டம் 54, அவசரக் கூட்டம் 8 மற்றும் சிறப்புக் கூட்டம் 1 ஆகமொத்தம் 63 மன்றக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது எனவும் இதில் முறையாக வருகைப் பதிவேடு, கூட்ட படி பதிவேடு, தீர்மானப் பதிவேடு ஆகியவைகள் முறையாக பராமரிக்கப்பட்டு வந்துள்ளதெனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
3. இப்பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் செய்யும் பெரும்பாலான பணிகள் அனைத்தும் முன்னதாகவே மன்றத்தின் ஒப்புதலுடன் நடைபெறும் எனவும், அத்தியாவசிய சூழ்நிலையில் ஒரு சில பணிகள் மட்டும் தலைவர் திருமதி டி.சி. ராஜலெட்சுமி அவர்களின் மூலம் மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டு மீண்டும் மன்றத்தின் ஒப்புதல் பெறப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.
4. 14 வது வார்டு எஸ்.கே. நகரானது தனி நபருக்கு உரிய இடத்தினை அரசு விலைக்கு வாங்கி, அதில் பொருளாதாரத்தில் பின் தங்கிய பொதுமக்களுக்கு குடியிருக்க இலவச வீட்டு மனைகளாக பிரித்து கொடுக்கப்பட்டு தற்போது பட்டாவும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் 06..07.2016 ல் அனைத்து வீடுகளுக்கும் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டு கதவு எண்கள் வழங்கப்பட்ட பின்னர் பெரும்பாலான நபர்கள் மின் இணைப்பும் பெற்றுள்ளனர் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இப்பகுதியில் வசிக்கும் 55 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான ஒரு அழ்குழாய் கிணறுடன் கூடிய மின் விசை பம்பு அமைத்து அதில் இரண்டு சின்டெக்ஸ் டேங்க் பொருத்தப்பட்டு குடிநீர் வசதியும் ஒரு தெருவிளக்கும் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.
5. மனுவில் குறிப்பிட்டுள்ள குளம் சர்வே எண் 935/1எ எனவும், மனுதாரர் புகார் தெரிவித்துள்ள வணிக வளாகம் பேரூராட்சிக்கு சொந்தமான வண்டிப்பாதை சர்வே எண் 937ல் கட்டப்பட்டு இக்கட்டிடம் முறையாக ஏலம் விடப்பட்டு, கூடுதல் தொகை கேட்கும் ஏலதாரருக்கு ஏலம் விடப்பட்டது, பதிவேட்டில் பதிந்து பராமரிக்கப்பட்டு வருவதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதில் எவ்வித முறைகேடும் இல்லை எனவும், இது சம்பந்தமாக மனுதாரர் உயர்நிதி மன்ற மதுரை கிளையில்

வழக்கு எண் W.P.13675/11 ன்படி பேரூராட்சி மீது வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கும் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6. இப்பேரூராட்சியில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி எவரும் திரு டி.சி.ராஜமோகன் என்பவரிடம் சொந்த வேலைகளுக்கு பயன்படுத்தப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

7. புதிய கட்டிடங்களுக்கான வரி விதிப்பினை பொறுத்த மட்டில் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920ன் படியும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் வரி விதிப்பு செய்யப்படுவதாகவும், தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் இப்பேரூராட்சியில் 575 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளும், 9 வணிக குடிநீர் இணைப்பும், 194 பொது குடிநீர் குழாய் மட்டும் நடைமுறையில் உள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

8. இப்பேரூராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் அனைத்தும் அரசிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு, ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சிகளின் பணிகளை மேற்கொள்ளும் முதல் தர ஒப்பந்தக்காரர்கள் முலமே பணிகள் நிறைவேற்றப்படுகிறது எனவும் இப்பேரூராட்சியில் முறைகேடான செயல்கள் ஏதும் நடைபெறவில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் திரு எஸ்.பி. செம்பன், இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2017ல் நேரில் ஆஜராகி தனது புகார் மனு குறித்த விளக்கங்களை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......பேரூராட்சியின் செயல் அலுவலர் முதல் பலருக்கும் 1990 ஆம் ஆண்டு முதல் மனு செய்திருப்பதாகவும், யாரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். அய்யலூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திருமதி இராஜலட்சுமிக்கு 80 வயதிற்கு மேல் ஆகிறது எனவும் அவர் சார்பாக அவரின் மகன் திரு ராஜ்மோகனும், முன்னாள் செயல் அலுவலர் திரு சரவணகுமார், பதிவறை எழுத்தர் திரு எஸ். மோகன் ஆகியோர் பேரூராட்சியின் நிர்வாகத்தினை முறைகேடாக பயன்படுத்தினர் என தெரிவித்துள்ளார், சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் 2011 ம் ஆண்டு வழக்கு தொடர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார். அய்யலூர் பேரூராட்சியில் அனைத்துக் குளங்களும் ஆக்கிரமிப்பாளர்கள் கைவசம் உள்ளதாகவும், இந்த நீர் நிலை தேக்கங்களில் திருமண மண்டபங்கள், அரிசி ஆலைகள் போன்றவை கட்டப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். அதற்கு மேல் இரவில் மண்ணையும் கொட்டி குளங்கள் மண் மூடிய மேடாக காட்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார். இதில் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட்டிருப்பதாகவும், பஞ்சாயத்து சார்பாக கட்டப்பட்ட அனைத்துக் கட்டிடங்களும் இதில்தான் கட்டியுள்ளார் எனவும் இதன் சர்வே எண் 935/1A ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் திட்டத்தில் பல்வேறு தெருக்களில் போடப்பட்ட சிமெண்ட் சாலைகளில் போதிய அளவு

சிமெண்ட் கலக்காமல் அமைத்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட ரோடுகள் பற்றிய முழு விவரங்களையும் பெற்று அதில் உள்ள குறைபாடுகளையும் பரிசீலித்து விரிவாக தன்னுடைய விளக்கங்களை அளிப்பதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

அய்யலூர் பேரூராட்சிக்குட்பட்ட 6 குளங்களையும் தனி நபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி குளத்தினை தூர்வாரி கரைகளை உயர்த்தி செம்மைப்படுத்தினால் நீர் ஆதாரமும் பெருகும், விவசாயமும் செழிக்கும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். எனவே இந்த குளத்தினுடைய ஆக்கிரமிப்புகளை எடுத்து மராமத்து பணிகளை செய்ய பேரூராட்சிக்கு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்வதாக தனது வாக்குமுலத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார், செயல் அலுவலரின் விளக்கக் கடிதம் மற்றும் மனுதாரரின் நேரடி வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டன. இப்பொருள் குறித்து உரிய தல ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் அவர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 பிரிவு 6 (4) (a) யின் கீழ் இம்முறைமன்ற நடுவ 07.8.2017ம் அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித எண் 3240/2017/பேரூ.2/நாள்27.11.2017ல் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சியில் 20.11.2017ல் தல ஆய்வு மேற்கொண்டதாகவும், இப்பேரூராட்சியின் தலைவராக திருமதி ராஜலெட்சுமி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அவரே 25.10.2011 முதல் 24.10.2016 முடிய உள்ள காலத்தில் மன்றக் கூட்டங்களை தலைமை ஏற்று நடத்தி கூட்ட நடவடிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்காணும் மன்ற கூட்ட நடவடிக்கை பதிவேடுகளில் அவரது மகன் திரு டி.சி.ராஜ்மோகன் என்பவர் உள்ளிட்ட எந்த அரசியல் பிரமுகரது கையொப்பமோ அல்லது குறுக்கீடு என்பதோ இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் ஆக்கிரமிப்பாளர் வசம் உள்ளதாக பொதுவாக தெரிவித்துள்ளார் எனவும் அய்யலூர் பேரூராட்சியினை பொறுத்த மட்டில் 5 எண்ணிக்கையிலான குளங்கள் / கண்மாய்கள் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது எனவும், மேற்படி குளங்கள் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் பேரூராட்சியின் தீவிர கண்காணிப்பில் உள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள குளம் புல எண் 935/1 எ-ல் தனியார் எவரும் அரிசி ஆலையோ வணிக வளாகமோ, திருமண மண்டபமோ குளத்தினை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை எனவும் மேற்படி குளத்தின் அருகில் ஏற்கனவே உள்ள ஒரு அரிசி ஆலை தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தில் கட்டப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் ஏதும் மேற்படி குளத்தினை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். புல எண் 935/1 A2-ல் 1978ம் ஆண்டு அரசாணை

எண் 1299/ வருவாய்த்துறை/ நாள் 01.06.1978 ன்படி உரிய கட்டணம் அரசுக்கு செலுத்தி பேருந்து நிலையம் அமைத்துக் கொள்ள அனுமதித்து அரசால் ஆணையிடப்பட்டது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்படி இடத்தில் பொதுமக்களின் குடிநீர் விநியோக அத்தியாவசியம் கருதி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதனால் பேருந்து நிலையம் அமைக்க போதுமான இடம் இல்லாததாலும் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த பழைய அலுவலகக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருந்ததால் தமிழக அரசின் பகுதி-2 திட்டம் 2011-12 ஆண்டு திட்டத்தின் கீழ் புதிய அலுவலகக கட்டிடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து மனுதாரரால் இது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற, மதுரைக் கிளையில் நீதிப்பேராணை எண் 13675/2011ன்படி தொடரப்பட்ட வழக்கில் பேரூராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை வரப்பெற்றுள்ளதாவும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண் 41476/2011/டி.4/நாள் 19.03.2012 ன்படி உரிய நில வகை மாறுபாடுக் கட்டணம் ரூ 1,88,617/- செலுத்திவிட்டு பேரூராட்சி அலுவலகம் 2013-14ல் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அய்யலூர் பேரூராட்சியில் பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும், பொது நிதியின் வாயிலாகவும் மூலதனப் பணிகள் அனைத்தும் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று இப்பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடையே ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு பின்னர் பணிகள் பொறியாளர்களின் மேற்பார்வையில் செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தள்ளார். மேற்படி பணிகள் உதவி செயற்பொறியாளரால் அளவு மேலளவு செய்யப்பட்டு பட்டியல் கூர்ந்தாய்வு செய்து பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் முறைகேடோ நிதியிழப்போ ஏற்படுத்தப்படவில்லை என தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் உரிய அறிவிப்பிற்கு பின்னரும் தனது மனுவினை விதிகளின்படி உரிய முறையில் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். 06.09.2017 அன்று கூறியது போல் ரோடுகள் குறித்து விரிவான விளக்கத்தினையும் அளிக்கவில்லை. மேலும் அய்யலூர் பேரூராட்சி புதிய அலுவலகம் கட்டுதல் சம்பந்தமாக மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கின் நிலை குறித்து தனது மனுவிலோ அல்லது நேரடி வாக்குமூலத்திலோ தெரிவிக்கவில்லை. மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற, மதுரைக் கிளையில் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண். 13675/2011, நாள் 25.02.2013 ன் கீழ்கண்டவாறு தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

"As per the report of the District Collector, Dindugal dt. 24.02.2013, the 7th Respondent in W.P.(MD)No. 13675/2011 by name D.C.Rajmohan has constructed a marriage hall and Rice Mill in S.No. 929/1A and 929/14A of Ayyalur Village of Vedasendur Taluk . There are no other private parties having encroached in the Kulam Poramboke land in S.No. 935/1A of Ayyalur Village of Vedasendur Taluk in Dindugal District.

Recording the said report filed by the District Collector, Dindugal the Writ Petition are dismissed as have no merits."

மேற்படி நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது மட்டுமல்லாது பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது ஆய்வறிக்கையில் அய்யலூர் பேரூராட்சியில் பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும், பொது நிதியின் வாயிலாகவும் செய்யப்பட்டுள்ள பணிகள் அனைத்தும் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பணிகள் குறித்து உதவி செயற்பொறியாளரால் உரிய மேலளவு செய்ப்பட்டுள்ளதையும் உறுதி செய்து எவ்வித முறைகேடும், நிதி இழப்பும் ஏற்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் தல ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்.**

–//உத்திரவின்படி –அனுப்பப்படுகிறது//–

பு. பழனிவேல்

செயலாளருக்காக

27/12/17

27/12/17

**பெறுநர்**

1.திரு எஸ்.பி. செம்பன்,
வேங்கனூர்,
அய்யலூர் அஞ்சல்,
வேடசந்தூர் தாலூக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அய்யலூர் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்,

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை